அறிவுலக ஆசான், பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவுச் சிலைக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டக் கழக செயலாளர் ப.மு.முபாரக்குடன் மலர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி திருமுல்லைவாசல் கடற்கரையில் முகத்துவாரம் மண் திட்டை அகற்ற கோரி விடுத்த கோரிக்கையை ஏற்றி சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில்

அரசு தொழில்நுட்ப கல்லூரியில் வேளாண்மை பொறியியல் ஆய்வகம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், செப், 20-

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அரசு தொழில் நுட்ப கல்லூரியில் வேளாண்மை பொறியியல் ஆய்வகத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில்நடைபெற்றது.

அரசு தொழில்நுட்பக் கல்லூரி வேளாண்மை பொறியியல் ஆய்வகத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது.

இத்தகைய சிறப்பான விழாவில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய இந்த கல்லூரி வேளாண்மை தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பான நிகழ்வாகும். ஏனெனில் வருகின்ற காலங்களில் வேளாண்மையானது முழுவதுமாக இயந்திரங்களால் மேற்கொள்ள வேண்டிய சூழல் வந்து கொண்டிருக்கிறது. அந்த சூழலில் அதற்கான தொழில்நுட்ப பணியாளர்கள் தேவை என்ற நிலையில் அதை முன் கூட்டியே நம்முடைய தொழில்நுட்ப கல்லூரியில் நம்முடைய மாணவர்களை தயார்படுத்தும் வகையில் இந்த துறை ஆரம்பிக்கப்பட்டிருப்பது சிறப்பான நிகழ்வாகும். அந்த வகையில் ஆசிரியர் பெருமக்களுக்கும், கல்லூரி முதல்வருக்கும் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்கால தலைமுறைகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து கல்விக்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், பள்ளி கல்வி, கல்லூரி கல்வி, உயர் கல்வி ஆகிய அனைத்தும் எல்லோருக்கும் கிடைத்திட வேண்டும். அதற்கான அடிப்படை கட்டமைப்புகள் சிறப்பாக அமைந்திட வேண்டும் என்று தான் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

பள்ளி கல்வியிலே அடிப்படை வசதிகளை மேம்பாடு செய்வதற்கு கல்வி அமைச்சராக தமிழ்நாட்டில் நீண்ட நாட்கள் பணியாற்றிய பேராசிரியர்அன்பழகன் அவர்களின் பெயரில் ஒரு திட்டத்தினை துவக்கி அனைத்து பள்ளிகளிலும் அடிப்படை வசதிகள் கிடைத்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நிதி வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல கல்லூரி கல்வி சிறப்பாக அமைவதற்கு அரசுக் கல்லூரிகளில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.3000 கோடி நிதி ஒதுக்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். இத்தகைய கல்வியை பெறுகின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்பினை பெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் முதல்வன் என்ற திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளார்கள். இந்த நான் முதல்வன் திட்டம் ஏன் என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டது. இதற்கு முன்பாக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி முடித்து வேலைக்கு செல்லும் போது வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனங்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்கான போதிய திறன் இல்லை என்ற நிலை தான் இருந்தது.

நானும் பொறியியல் பட்ட தாரி என்ற வகையில், படித்து முடித்து வேலைக்கு செல்கின்ற போது நேர்காணலில் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கும், நாம் படித்ததற்கும் தொடர்பில்லாத நிலைதான் உள்ளது. காரணம் கல்வியிலே நாம் பெறுவதும், தொழிற்சாலைகள் மற்றும் புதிய, பெரு நிறுவனங்களில் அவர்கள் செயல்படுத்துவதற்கும் உள்ள இடைவெளியே ஆகும். நகர்புறத்து மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் இருந்தது. பல்வேறு பயிற்சிகள் மூலமாக அல்லது தனியார் கல்லூரிகளில் பயிலும் போது அங்கு அளிக்கின்ற பயிற்சிகள் மூலமாக அவர்கள் தொழிற்நிறுவனங்களுக்கு வளாக நேர்காணலில் எளிதாக தேர்வாகும் நிலை இருக்கும். எனவே அத்தகைய வாய்ப்பை கிராமப் புறங்களில் இருக்கும் மாணவர்களும், அரசு கல்லூரிகளிலே பயில்கின்ற மாணவர்களும் பெறும் வகையில்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

இதுபோன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு நான் முதல்வன் திட்டத்தின் மற்றொரு பிரிவாக உள்ள பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் என்ன கல்வியை பெறலாம் என்பதற்கு ஒரே வளாகத்தில் குன்னம் தொகுதி, வேப்பூர் அரசு பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்டது. ஒரே வளாகத்திலேயே அருகில் உள்ள பல்வேறு கல்லூரிகள் கல்வி பயில்வதற்கு இடம் கொடுக்கின்ற வகையில் கிட்டதட்ட 52 அரங்குகளை அமைத்து பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் என்ன படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதற்கான ஆலோசனைகள் பெறும் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதற்கு முன்பாக கல்லூரிகளில் சேருவதற்கு உறவினர்கள், ஆசிரியர்கள் மற்றபிற நபர்களிடம் கேட்கும் நிலை இருந்தது. இந்த நிலை மாறவேண்டும் எல்லோருக்கும் இத்தகைய தகவல்கள் எளிதாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனையும் நான் முதல்வன் திட்டத்தில் சேர்த்துள்ளார்கள். மாணவர்கள் புதிய வேலைவாய்ப்பினை தேடி செல்லும் போது அதற்கு தயாராக இருக்க வேண்டும் என்ற வகையில் இத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதேபோன்று வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிறுவனங்களை அழைத்து தொழில் துவங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்காகவே 2 முறை வெளிநாட்டிற்கு பயணம் மேற்கொண்டு தொழில் நிறுவனங்களுடன் தமிழ் நாட்டில் தொழில் துவங்க வேண்டுகோள் வைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வருகின்ற ஜனவரி மாதம் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்த திட்டமிட்டுள்ளார்கள். எனவே அதன் வழியாக புதிய தொழில் நிறுவனங்கள் துவங்கப்படும் போது வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதேபோன்று பெரம்பலூர் மாவட்டத்தில் தோல் இல்லாத காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார். இதன் மூலம் சுமார் 5000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஒசூரில் மின்சார இருசக்கர வாகனம் தயாரிக்கும் தொழிற்சாலையின் மூலம் சுமார் 10000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்தகைய வேலைவாய்ப்புகள் பெரும்பாலும் ஐடிஐ, தொழில்நுட்ப கல்வி, பொறியியல் கல்வி பயின்ற மாணவர்களுக்கு கிடைக்கும். எனவே, மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறனை பெறவும், கல்லூரி கல்வியை நல்ல முறையில் பயின்று நல்ல தொரு வேலைவாய்ப்பினை பெற்று வாழ்கையில் முன்னேற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் ராம கிருஷ்ணன், அரசு தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர், கு.தமிழரசு, வேளாண் பொறியியல் துறைத் தலைவர் ம.அப்பூதி அடிகள், திருமானூர் ஒன்றியக்குழுத் தலைவர் சுமதி அசோகச்சக்கரவர்த்தி, கீழப்பழுவூர் ஊராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி மருதமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கருத்தரங்கம்!

திருவாரூர், செப்.20-

திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கருத்தரங்கம் 24.9.2023 அன்று நடைபெற இருக்கிறது. பூண்டி.கே. கலைவாணன் தலைமையில் தலைமைக்கழக பேச்சாளர்கள் பங்கேற்று கருத்தரங்கத்தில் பேச இருக்கின்றனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்றுவருகிறது. திருவாரூர் மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் அவர்களின் ஆலோசனைப் படி மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கருத்தரங்கம் 24.9.2023 ஞாயிறு அன்று மாலை மணிக்கு நடைபெற இருக்கிறது.

இந்த கருத்தரங்கத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்கிறார். தலைமை கழக பேச்சாளரும் தமிழ்நாடு சட்டப்பேரவை சிறப்புகொறடா விமான கோவி.செழியன் "கலைஞர் ஒரு சமூக நீதி காவலர்" எனும் தலைப்பிலும் ,மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி "கலைஞர் ஒரு சகாப்தம்" என்கிற தலைப்பிலும், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் மன்னை சோம இளங்கோவன் "அரசியல் வித்தகர் கலைஞர்" எனும் தலைப்பிலும் கருத்துரையாற்ற இருக்கின்றனர்.

மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந் தலைவர் புலிவலம் ஏ. தேவா, மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், ஐ.வி. குமரேசன், பால.ஞானவேல்,நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரசாமி, பூண்டி. கலைவேந்தன் மாவட்ட இலக்கிய அணி தலைவர் அண்ணாதாசன், துணைத்தலைவர் தியாகராஜன், அமைப்பாளர்கள் எண்கண் மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், தங்க.குண சேகரன்,பால. முத்து, செல்லத்துரை, சோமசுந்தரம் ஆகியோரும், உள்ளிட்டோரும் முன்னிலை ஏற்கின்றனர்.

தந்தை பெரியார் அவர்களின்145 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் கே.ஆர்.என்.போஸ், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், பி.அண்ணாதுரை, ஜெ.அஸ்ரப் அலி, ராஜேந்திர சோழன், எம்.ஏ.எம்.இம்தியாஸ், அதாவுல்லா மற்றும் பலர் உள்ளனர்.

மதுரை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

மேலூரில் மூத்த முன்னோடிகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொற்கிழி வழங்குகிறார்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில்!

மதுரை, செப். 20-

மதுரை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று (20ந்தேதி) காலை மேலூரில் நடைபெறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிக்கிறார். வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியை தொடர்ந்து மாலை மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலையை திறந்து வைத்து 100அடி உயர கொடிக் கம்பத்தில் கழக கொடியேற்றி இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறார், அதன்விபரம்.

மதுரை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று (20ஆம் தேதி-புதன்கிழமை) காலை 10 மணிக்கு மேலூரில் கலைஞர் திடலில் நடைபெறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகிக்கிறார். மேலூர் நிகழ்ச்சியை தொடர்ந்து மாலை 4 மணிக்கு வண்டியூர் அருகே உள்ள மஸ்தான்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவச் சிலையை திறந்து வைத்து பின்னர் 100 அடி உயர கொடிக்கம்பத்தில் கழகத்தின் இருவண்ண கொடியேற்றுகிறார். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை வடக்கு மாவட்டச் செயலாளர் - வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டக் கழகத்தினர் செய்து வருகின்றனர்.

இதேபோல் கொடியேற்ற நிகழ்ச்சியினை தொடர்ந்து மதுரை விரகனூர் சுற்றுச் சாலையில் அமைந்துள்ள கலைஞர் திடலில் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தின் இளைஞர் அணியினர் பங்கேற்கும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று இளைஞர் அணியினருக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் மற்றும் மாவட்டக் கழகத்தினர், இளைஞர் அணியினர் செய்து வருகின்றனர்.

தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் தந்தை பெரியாரின் 145வது பிறந்த நாள் விழா மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி அரூர் நகர செயலாளர் முல்லைரவி தலைமையில் தந்தை பெரியாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து சமத்துவ நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது.உடன் மாவட்ட துணை செயலாளர் செ.கிருஷ்ணகுமார், அரூர் பேரூராட்சி துணைத்தலைவர் சூர்யாதனபால்,நகர துணை செயலாளர்கள் விண்ணரசன், செல்வதயாளன்,கணேசன்,ஐ.டி விங் கு.தமிழழகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தூத்துக்குடி கே.வி.கே. சாமி
செப்டம்பர் 20 (1956)

தி.மு.க. செயற்குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் பணியாற்றியவர்.

1947ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தி.க. மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது பங்கேற்று சிறை சென்றவர்.

தூத்துக்குடி நகரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.